# மும்மொழித் திட்டம் - தமிழ்நாடு ஏற்காது; எதிர்த்து போராடும்!

``இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்தியைப் படிக்கின்றன. ஆனால் தமிழ்நாடு மட்டும்தான் மும்மொழித் திட்டத்தை எதிர்க்கிறது. ஏற்றுக் கொள்ள மறுக்கிறது " என்று அடிக்கடி புலம்புவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார். ஆளுநர் ஆர்.என்.இரவி. பாவம்! அவருக்கு இந்திய வரலாறு தெரியாது போலும்!

என்றைக்குமே தமிழ்நாடு தனியாகத்தான் சிந்தித்துச் செயல்பட்டிருக்கிறது. அதற்கு வரலாற்றில் நிறைய சான்றுகள் உள்ளன. அவைகளை வரிசையாகக் காண்போம்.

1) கி.மு. 298 முதல் கி.மு. 272 வரை ஆட்சி செய்த மௌரியப் பேரரசன் பிந்துசாரன்தான், தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்த முதலாவது வடநாட்டரசன். அவன் ஏற்கனவே இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கில் பல நாடுகளைக் கைப்பற்றி, தன்னுடைய பேரரசை விரிவாக்கிக் கொண்டவன்;

இரண்டு கடல்களுக்கு நடுவே இருந்த நாடுகளைக் கைப்பற்றியவன் என்று பாராட்டப் பெற்றவன். எனவே, தெற்கிலும் தன்னுடைய பேரரசை விரிவாக்க அவன் முடிவு செய்தான். ஆனால், அவன் நினைத்தது போல் தெற்கில் வெற்றிகளைப் பெற முடியவில்லை.

துளுவ நாட்டை ஆண்ட கோசர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, மௌரியப் படை தமிழ்நாட்டின் வடக்கு எல்லையில் இருந்த மோகூர் மன்னன் பழையன் மீது தாக்குதல் தொடுத்தது. ஆனால், தமிழ் மன்னன் பழையன் மோரிய (மௌரிய) கோசர்களின் படையெடுப்பை முறியடித்ததாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

மேலும், மௌரியப் பேரரசின் பெரும் படை ஒன்று தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வருகிறது என்று கேள்விப்பட்டதும், இளஞ்சேட் சென்னி என்ற சோழ அரசன் தலைமையில் பாண்டியர், சேர, வேளிர்கள் என்று அனைவரும் ஒன்றாக அணி திரண்டு வந்து, மௌரியப் படையைத் தடுத்துப் போரிட்டனர். தமிழ் அரசர்களுடைய கூட்டுப் படையின் கடுமையான எதிர்த் தாக்குதல் முன்பு நிற்க முடியாமல், மௌரியப் படை பின் வாங்கி ஓடியது.

பிந்துசாரனுக்குப் பின்பு மௌரியப் பேரரசனான அசோகன் வெளியிட்ட 14ஆவது பாறைக் கல்வெட்டில், அவனுடைய பேரரசுக்குத் தெற்கே சேர, சோழ, பாண்டிய அரசுகள் என்ற மூன்று தமிழ் அரசுகள் சுதந்திர அரசுகளாக இருந்தன என்று தெரிவித்துள்ளான்.

மேலும், கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் கலிங்க நாட்டை ஆட்சி செய்த காரவேலன் என்ற மன்னன் வெளியிட்ட அதிகும்பா கல்வெட்டும், மேலே சொன்ன செய்திகளை உறுதிப்படுத்துகிறது. எனவே, தமிழ் அரசுகள் தனி அரசுகளாகச் சுதந்திர அரசுகளாகவே செயல்பட்டு வந்தன.

2) அடுத்து, கி.பி. 14ஆம் நூற்றாண்டில், டில்லியில் சுல்தான்கள் ஆட்சி செய்த காலத்தில், டில்லியின் கவனம் தமிழ்நாட்டின் பக்கம் திரும்பியது. கி.பி. 1310இல் அலாவுதீன் கில்ஜி சுல்தானாக இருந்த போது, அவனது தளபதி மாலிக்காபூர் தலைமையில் ஒரு படையை தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தான். மாலிக்காபூர் தமிழ்நாட்டைத் தாக்கி நாசமாக்கியதுடன், ஏராளமான செல்வத்தைத் கொள்ளையடித்து டில்லிக்குத் திரும்பிச் சென்று விட்டான்.

ஆனால், அவன் தமிழ்நாட்டில் நிலையான நிர்வாகத்தையோ, ஆட்சி அமைப்பையோ ஏற்படுத்தவில்லை. எனவே, தமிழ்நாடு டில்லி ஏகாதிபத்தியத்தின் முன்பு கைகட்டி நிற்கவுமில்லை; கப்பம் செலுத்தவுமில்லை.

3) முகம்மது பின் துக்ளக் டில்லி சுல்தானாக ஆன பின்பு, கி.பி. 1328இல் ஜலாலுத்தீன் அசன்சா என்பவன் தலைமையில் ஒரு படையைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தான். அசன்சா மதுரையைக் கைப்பற்றி, தன்னுடைய ஆட்சியை ஏற்படுத்தினான். ஆனால், டில்லி ஏகாதி பத்தியத்திற்கு அடங்கிய சிற்றரசாக மதுரை இருக்காது. சுதந்திர நாடாகவே இருக்கும் என்று அறிவித்தான். அதனால் வெகுண்டு எழுந்த துக்ளக் ஒரு பெரும்படையுடன் புறப்பட்டு தமிழ்நாடு நோக்கி வந்தான். வாரங்கல்லில் அவன் முகாமிட்டிருந்த போது, பயங்கரத் தொற்று நோய்த் தாக்கி வீரர்கள் பலர் உயிரிழந்து விட்டனர். துக்ளக்கும் தொற்று நோய் தாக்குதலுக்கு ஆளானதால், அங்கிருந்து புறப்பட்டு டில்லிக்குத் திரும்பிச் சென்று விட்டான். மதுரை சுதந்திர நாடாகவே தொடர்ந்தது.

4) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில்தான் முதல் முறையாகத் தமிழ்நாடு, டில்லி ஏகாதிபத்தியத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. அந்த வரலாற்றில் மூன்று விசித்திரங்களை நம்மால் காண முடிகிறது.

(1) இந்தியாவின் மீது படையெடுத்து வந்தவர்கள் எல்லாம் வடமேற்கு திசையிலிருந்துதான் வந்தார்கள். டில்லியைக் கைப்பற்றி தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினார்கள். ஆனால், ஆங்கிலேயர் தெற்கிலிருந்து கிளம்பி இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். தமிழ்நாட்டிற்கு வணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் இங்கிருந்த ஆட்சியாளர்களிடம் நயமாகவும், நயவஞ்சகமாகவும் பேசியும் நடந்தும், சண்டையிட்டும், சமரசப் போர்வை போர்த்தியும், ஒவ்வொரு நிலப் பகுதியாக ஒவ்வொரு ஊராக வளைத்துப் போட்டு, தங்கள் ஆதிக்கத்தை விரிவாக்கிக் கொண்டே வந்தனர்.

கி.பி. 1640இல் சென்னையில் ஆங்கிலேயர் காலடி வைத்த நாள் முதல் 160 ஆண்டுகாலப் போராட்டத்திற்குப் பின்பே, ஆங்கில ஏகாதிபத்தியம் தமிழ்நாடு முழுவதையும் தனது கட்டுப் பாட்டின் கீழ்க் கொண்டு வந்தது. உலக வரலாற்றில் ஒரு நாட்டை அடிமைப் படுத்துவதற்கு, எந்த ஒரு ஏகாதிபத்தியத்திற்கும் இவ்வளவு நீண்ட காலம் ஆனதில்லை. ஆனால், தமிழ்நாட்டிலேதான் அது நடந்தது.

தொடக்கத்தில் சில காலம் வரை சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை கீழைக் கடற்கரையில் இருந்த ஆங்கில வணிக மையங்களுக்கு எல்லாம் தலைமையகமாக இருந்தது. பின்னர் தலைமையிடம் கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டது. அங்கிருந்து 1911 இல்தான் டில்லிக்கு மாற்றப் பட்டது.

(2) கி.மு. 327இல் இந்தியாவின் மீது அலெக்ஸாண்டர் படையெடுத்து வந்தபோது, அவருடன் வந்தவர்கள் அனைவரும் கிரேக்க நாட்டு வீரர்கள்தான். கி.பி. 1526இல் இந்தியாவின் மீது பாபர் படையெடுத்து வந்தபோது, அவருடன் வந்தவர்கள் அனைவரும் முகலாயர்கள்தான். ஆனால், பதினெட்டாம் நூற்றாண்டில், தமிழ்நாட்டில் போரிட்ட ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தின் படை வீரர்கள் அனைவரும் ஆங்கிலேயர் அல்ல. ஒரு சிலம் மட்டுமே, அதுவும் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் மட்டுமே ஆங்கிலேயர்கள். பெரும்பான்மையான மற்ற வீரர்கள் எல்லாம் நம்மவர்களே. அவர்கள் எல்லாம் கூலிப் படைகளாக ஆங்கில நிர்வாகத்திடம் பணியாற்றினர். எனவே, ஆங்கிலேயர் மிகத் தந்திரமாக நம்மவர்களைக் கொண்டே நம்முடைய அரசுகளுக்கு முடிவு கட்டிவிட்டனர்.

(3) இங்கிலாந்து நாட்டிலிருந்து அரசுப் படைகள் எதுவும் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வரவில்லை. இங்கே வணிகம் செய்ய வந்த கும்பல்தான், இங்கிருந்து குழப்பமான அரசியல் சூழ்நிலையைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி விட்டனர். அதன் விளைவாகச் சுமார் 150 ஆண்டுக் காலம் வணிகக் கும்பல் ஒன்றுதான் தமிழ்நாட்டை ஆட்சி செய்து வந்தது. கி.பி. 1857க்குப் பின்னர்தான் இங்கிலாந்து அரசின் நேரடி ஆட்சியின் கீழ் தமிழ்நாடு வந்தது.

இவ்வாறு ஆங்கிலேயரிடம் அடிமைப் பட்டுப் போன தமிழ்நாட்டிலும் இந்தியாவின் மற்ற பகுதிகளைப் போல விடுதலைக் கிளர்ச்சிகள் வெடித்தன. இந்தியாவின் பல பகுதிகளில் உள்ளூர்க் காரணங்களுக்காகவும், தனிப்பட்ட காரணங்களுக்காகவும் ஆங்கிலேயரை எதிர்த்து கிளர்ச்சி செய்தவர்களை விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று கூறுகின்றனர். ஆனால், ஆங்கிலேயர்களுக்கு எதிராக முறையாக அறிவிப்பு செய்து போரைத் தொடங்கியவர்கள் தமிழர்கள்தான். (4) சிவகங்கையை ஆண்ட மருது பாண்டியர் 1801ல் சுதந்திரப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டு சாதி, மத, இன வேறுபாடின்றி மக்கள் அனைவரும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இப்பிரகடனத்தின் படிகள் திருச்சி கோட்டை வாயிலிலும், திருவரங்கம் கோயில் வாயிலிலும் ஒட்டப்பட்டன. இந்தியாவிலேயே ஆங்கிலேயருக்கு எதிராக சுதந்திரப் பிரகடனம் வெளியிட்டு போரைத் தொடங்கியவர்கள் தமிழர்கள் மட்டுமே.

5) ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து, நம் நாடு விடுதலை பெற்றபின்பு, புதிய அரசியல் அமைப்புச் சட்டம் 1950ஜனவரி 26ம் நாள் நடைமுறைக்கு வந்தது. இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டில் மாநில அரசின் இட ஒதுக்கீடு கொள்கையைப் பின்பற்றி கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைகள் நடைபெற்றன. செண்பகம் துரைராசு என்ற பார்ப்பன மாணவி, மாணவர் சேர்க்கைகளில் இடஒதுக்கீடு பின்பற்றப்படுவதால், தனக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்றும், அதனால் மாநில அரசின் இட ஒதுக்கீடு கொள்கையை நீக்க வேண்டும் என்றும் கோரி, சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்தார். அதை ஏற்றுக் கொண்ட சென்னை உயர்நீதிமன்றம், மாநில அரசின் இட ஒதுக்கீடு கொள்கை செல்லாது என்று தீர்ப்பளித்தது.



பேராசிரியர்
**அ.இராமசாமி**

அதை எதிர்த்து பெரியார் தலைமையில் தமிழ்நாட்டில் ஒரு பெரிய போராட்டம் வெடித்தது. மற்ற மாநிலங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பற்றி கவலைப்படாத போது, தமிழ்நாடுதான் அந்த தீர்ப்பினை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று அதற்கு எதிராகப் போராட்டம் நடத்தியது. அதன் விளைவாகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் மாநில அரசு சட்டங்கள் இயற்ற வழிவகை செய்து, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் முதலாவது திருத்தத்தை பிரதமர் ஜவகர்லால் நேரு கொண்டு வந்தார். அந்தத் திருத்தம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் பிரிவு 15 உட்பிரிவு 4 ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது. அதைக் கொண்டு வந்த நேரு நாடாளுமன்றத்தில் பேசும் போது சென்னையில் நடைபெற்ற சில கிளர்ச்சிகள் விளைவாகவே இதைக் கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார். எனவே; எல்லா மாநிலங்களும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டன. எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதால் தமிழ்நாடும் அமைதியாக ஏற்றுக் கொள்ளவில்லை, உரிமைப் போரைத் தொடர்ந்தது. வெற்றியும் பெற்றது.

6) இந்தியாவில் ஆகஸ்ட்15 சுதந்திர நாளாகவும், சனவரி26 குடியரசு நாளாகவும் கொண்டாடப்படுகிறது. ஆகஸ்ட்15 ஆம் நாள் டில்லி செங்கோட்டையில் பிரதமர் தேசியக் கொடியை ஏற்றுவதும், சனவரி26 ஆம் நாள் குடியரசுத் தலைவர் தேசியக் கொடியை ஏற்றுவதும் வழக்கம். ஆனால், மாநிலங்களில் சுதந்திர நாள், குடியரசு நாள் இரண்டு நாட்களிலும் ஆளுநரே தேசியக் கொடியை ஏற்றி வந்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சருக்கு எந்த உரிமையும் கிடையாது. இந்நிலையை எல்லா மாநிலங்களும் ஏற்றுக் கொண்ட போது, தமிழ்நாடு மட்டும் அதை ஏற்க மறுத்தது. சுதந்திர நாளில் தேசியக் கொடியை ஏற்றும் உரிமை மாநில முதலமைச்சர்களுக்குத் தரப்பட வேண்டும் என்று கலைஞர் தான் கோரிக்கை எழுப்பினார். அதை ஒன்றிய அரசு ஏற்றுக் கொண்டு, சுதந்திர நாளில் மாநிலங்களில் முதலமைச்சர்களே கொடியேற்றுவார்கள் என்று அறிவித்தது. அதன் விளைவாக 1974 ஆகஸ்ட்15 ஆம் நாள் சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை வளாகக் கொடிமரத்தில், முதலமைச்சர் கலைஞர் தேசியக் கொடியை ஏற்றினார். சென்னையில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் அன்றைய தினம் முதலமைச்சர்களே கொடி ஏற்றினர். இந்த உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞருக்குத்தான் எல்லா மாநில முதலமைச்சர்களும் நன்றி கூற வேண்டும். “உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம்” என்பதே கலைஞரின் முழக்கம். எனவே, எல்லா மாநிலங்களும் உரிமையை விட்டுக் கொடுத்தாலும், தமிழ்நாடு மட்டும் தனியாக உரிமைக்குப் போராடும்.

7) 1971இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில், உத்திர பிரதேச மாநிலம் ரேபரேலி தொகுதியில் முறைகேடுகள் செய்து இந்திராகாந்தி வெற்றி பெற்றுள்ளதால், அவருடைய வெற்றி செல்லாது என்று அறிவிக்கக் கோரி, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இராச நாராயணன் அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்திருந்தார். அதை ஏற்றுக் கொண்ட நீதிபதி சே.என். சின்கா, 1975ஜூன் 12ஆம் நாள் வெளியிட்ட தீர்ப்பில் இந்திராகாந்தி பெற்றி பெற்றது செல்லாது என்று அறிவித்தார். அதே வேளையில், தீர்ப்பின் செயல்பாட்டுக்கு 20 நாட்களுக்கு இடைக்கால தடையும் வழங்கினார். எனினும் எதிர்க்கட்சிகள் பிரதமர் பதவியிலிருந்து இந்திரா காந்தி உடனடியாக விலக வேண்டுமென்று கோரின. இதற்கிடையே, இந்த தீர்ப்பிற்குத் தடை விதிக்கக் கோரி இந்திரா காந்தி உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தார். அதை ஏற்றுக் கொண்ட நீதிபதி வி.ஆர்.கிருட்டிணன் அய்யர் உச்ச நீதி மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வரும் வரையில் இந்திரா காந்தி பிரதமராக நீடிக்கலாம் என்றும், ஆனால் நாடாளுமன்றத்தில் வாக்களிக்கக் கூடாது என்றும் ஆணையிட்டார்.

ஆனால், எதிர்க்கட்சிகள் இனிமேலும் காத்திருக்கத் தேவையில்லை என்று முடிவெடுத்து, ஜூன்25 ஆம் நாள், புதுதில்லியில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்தன. அக் கூட்டத்தில், இந்திரா காந்தியைப் பதவி விலகக் கோரி, ஒரு வார காலச் சட்ட மறுப்பு மக்கள் இயக்கம் ஜூன் 29 ஆம் நாள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும், அப்பொதுக்கூட்டத்தில் பேசிய ஜெயப்பிரகாச நாராயணன் அரசைச் செயல்பட விடாமல் மக்கள் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அரசு அதிகாரிகள், காவல் துறையினர், இராணுவதினர் ஆகிய அனைவரும்

அரசியலமைப்பிற்கும், சட்டத்திற்கும் எதிரான அரசின் எந்த ஆணையையும் ஏற்க மறுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் திட்டங்களைத் தடுப்பதற்கு இந்திரா காந்தி முடிவு செய்தார். ஜூன் 26 ஆம் நாள் இந்திராகாந்தி அரசியலமைப்புச் சட்டத்தின் 352ஆவது பிரிவின் படி, உள்நாட்டு நெருக்கடி நிலையை அறிவித்து, அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்குத் தடை விதித்தார். அரசியலமைப்பின் கூட்டாட்சித் தன்மை, அடிப்படை உரிமைகள், குடிமை உரிமைகள் ஆகிய அனைத்தும் நீக்கப்பட்டன. பத்திரிகைகள் அனைத்தும் கடுமையான தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. நாடு முழுவதிலும் முக்கிய எதிர்க் கட்சித் தலைவர்கள் நூற்றுக் கணக்கில் கைது செய்யப்பட்டனர். இந்தியா விடுதலை அடைந்த பின்னர், முதல் முறையாக வலிமை மிக்க ஒரு சர்வாதிகாரியின் கரங்களில் இந்திய சனநாயகம் சிக்கி மூச்சு விட முடியாமல் திணறிக் கொண்டிருந்தது.

நாட்டில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளாக, ஜூன் 27 ஆம் நாள் காலை 11.00 மணிக்கு தி.மு.க. செயற் குழு சென்னையில் கூடியது. நெருக்கடி நிலை அறிவிப்பைப் திரும்பப் பெற வேண்டும் என்றும், பத்திரிகைத் தணிக்கையை நீக்க வேண்டும் என்றும், எதிர்க் கட்சியினர் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஜூலை 6ஆம் நாள் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் கலைஞர் நெருக்கடி நிலையைக் கண்டித்ததுடன், அதைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஆனால், இந்திரா காந்தி எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. 1976 ஜனவரி 31ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 356ஆவது பிரிவின் படி தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியைக் கலைத்து விட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப் படுத்தினார். அதைத் தொடர்ந்து இன்றைய தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், முரசொலி மாறன், ஆற்காடு ந.வீராசாமி உட்பட ஆயிரக் கணக்கான தி.மு.க. முன்னணியினரும், தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். சிறைக் காவலர்களின் கடுமையான தாக்குதலுக்கு ஆளான சிட்டிபாபு உயிர் நீத்தார். மதுரைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாத்தூர் பாலகிருட்டிணன் உடல் நலிவுற்று மரணமடைந்தார்.

தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு ஏறத்தாழ ஓராண்டிற்குப் பிறகு, பிரதமர் இந்திரா காந்தி நெருக்கடி நிலையைத் திரும்பப் பெற்றார். அதன் பிறகு 1977 மார்ச்சில் மக்களவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்திரா காந்தி தோற்றுப் போனார். சனதாக்கட்சி வெற்றி பெற்று மொரார்ஜி தேசாய் தலைமையில் ஆட்சி அமைந்தது.

இவ்வாறு, எல்லா மாநிலங்களும் நெருக்கடி நிலையை ஏற்றுக் கொண்ட பின்பும், தமிழ்நாடு மட்டும் நெருக்கடி நிலையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன், எதிர்த்துப் போராடவும் செய்தது. இந்தியாவில் தமிழ்நாடு மட்டும் தனித் தீவாக இருப்பதாகப் பிரதமர் இந்திரா காந்தியே குற்றம் சாட்டும் அளவிற்குத் தமிழ்நாடு தனியாகவும், சுதந்திரமாகவும் செயல்பட்டது.

8) இந்த வரலாற்றுப் பாரம்பரியப்படியே, எல்லா மாநிலங்களும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டாலும், தமிழ்நாடு மட்டும் ஏற்க மறுக்கின்றது; எதிர்த்துப் போராடுகின்றது. ஆனால், எல்லா மாநிலங்களும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தி வருகின்றன என்பதும் தவறாகும். உண்மையில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் குறிப்பிட்டதைப் போல், இந்தி பேசும் மாநிலங்களில் மும்மொழித் திட்டம் இல்லை என்பதுடன், இருமொழித் திட்டம் கூட கிடையாது. ஒரு மொழித் திட்டம்தான். இந்தி மட்டுமே ஆட்சிமொழி, பயிற்று மொழி எல்லாம். எனவே, மும்மொழித் திட்டம் ஒரு மோசடித் திட்டம். இந்தியைத் திணிக்கவும், பரப்பவும் கொண்டு வரப்பட்ட ஓர் ஏமாற்றுத் திட்டம். அதனால்தான் தமிழ்நாடு மும்மொழித் திட்டத்தை ஏற்க மறுக்கின்றது; எதிர்த்துப் போராடுகின்றது.

தமிழ் திரைப்படம் வீரபாண்டிய கட்டபொம்மன் பார்த்திருப்பீர்கள். அதில் கடைசிக் காட்சியில் கட்டபொம்மனை ஆங்கிலேயத் தளபதி பானர்மேன் விசாரணை செய்வான். அது ஒரு போலி விசாரணை என்பது கட்டபொம்மனுக்குத் தெரியும். ஆனால், அதையும் அவன் எதிர்கொள்வான். அப்போது பானர்மேன் கட்டபொம்மனைப் பார்த்து, ``எல்லாப் பாளையக்காரர்களும் பணிந்து விட்டார்கள். பயனடைகிறார்கள். நீ ஒருவன் மட்டும் பணியாததால், அது உனக்கு ஒரு லாபமா?" என்று கேட்பான். அதற்கு கட்டபொம்மன், ``எல்லாப் பாளையக் காரர்களும் பணிந்து விட்டார்கள். நான் ஒருவன் மட்டும் பணியாததால் அது உனக்கு ஒரு நஷ்டமா?" என்று திருப்பி கேட்பான்.

``எல்லா மாநிலங்களும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளன; இந்தியைப் படிக்கின்றன. ஆனால் தமிழ்நாடு மட்டும் ஏன் மும்மொழிக் திட்டத்தை ஏற்க மறுக்கின்றது?" என்று கேட்கும் ஆளுநர் ஆர்.என். இரவிக்கு, நாமும், வீரபாண்டிய கட்டபொம்மன் முழங்கியதைப் போல் கேட்போம் ;

`` எல்லா மாநிலங்களும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. நாங்கள் மட்டும் ஏற்காதது உனக்கு ஒரு நஷ்டமா? "



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ள திட்டமான மதுரை செல்லூர் கண்மாயிலிருந்து நிரந்தர சிமெண்ட் கால்வாய் அமைக்கும் பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையர் தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வெங்கடேசன், பூமிநாதன், மண்டல தலைவர்கள் வாசுகி சசிக்குமார், சரவண புவனேஷ்வரி, கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், துரை கோபால் என்கிற அன்பு, மருது பாண்டியன், சசிக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




ஜெனீவாவில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் மாநாட்டில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவரும் விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித் தலைவருமான பொன்.குமார் கலந்துகொண்டார்.